செய்தி வெளியீடு எண்: 405 நாள்: 28.06.2017

## செய்தி வெளியீடு

தமிழ்நாடுஅரசு வணிகவரித்துறை சார்பில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி குறித்த மாநில அளவிலான கருத்தரங்கம் 28–06–2017 அன்று மாலை 4.00 மணியளவில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் நாடு முழுவதும் ஜுலை 1ஆம் தேதி முதல் அமல்படுத்தவுள்ள நிலையில் அனைத்து வணிக பெருமக்களுக்கும் விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை வழங்க தமிழ்நாடு அரசு வணிகவரித்துறை இக்கருத்தரங்கை ஏற்பாடுசெய்தது.

இக்கருத்தரங்கை மாண்புமிகு நிதி மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார் அவர்கள் துவக்கி வைத்து விழாப் பேருரையில் நமது முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மாநில சுயாட்சி பாதுகாக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்து அதில் வெற்றி பெற்றார். அதனைத் தொடர்ந்து அரசியலமைப்பு சட்டம் 101வது பிரிவு அமுல்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து தான் பெட்ரோலிய பொருட்கள் மற்றும் மதுபான வகைகளக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் (GST) வரிச் சட்டதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. மேலும் அரசுக்கு இழப்பீடு வழங்கவும் வழிவகை செய்யப்பட்டது. மேலும் வணிகர்களின் பல்வேறு கோரிக்கைகளை GST கவுன்சலில் முன் வைத்து 66 பொராருட்களுக்கு வரி விலக்கு அல்லது வரி குறைப்பு பெறப்பட்டது. GST அமுல் படுத்தப்பின்னரும் GST கவுன்சலில் நடைமுறையில் இருக்கும். எனவே வணிகர்கள் தங்கள் குறைகளை GST கவுன்சலில் வைத்து தீர்த்துக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி அவர்கள் தலைமை உரையாற்றுகையில், GST முதன் முதலாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள பட்ட நேரத்தில் அப்போதை முதல்வரும் தற்போதைய

பாரதப் பிரதமாரான திரு மாண்புமிகு மோடி அவர்கள் ஆட்சேபித்தாலும், GST யில் உள்ள நன்மைகளை கருத்தில் கொண்டு அதனை நடைமுறைப்படுத்த முழு முயற்சி மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவித்தார்.

மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரித்துறை, முதன்மை தலைமை ஆணையர் திரு. சி.பி. ராவ், இ.வ.ப. அவர்கள் தனது சிறப்புரையாயில் GST அமுலாக்கத்தின் காரணமாக இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு விழுக்காடு உயர வாய்ப்புள்ளதாக தெரிவித்தார். மேலும் நுகர்வோர் பயன்படுத்தும் பல பொருட்களின் விலை கணிகமாக குறையும் என்று தெரிவித்தார். இந்நிகழ்ச்சியின் துவக்கத்தில் கூடுதல்தலைமைச் செயலாளர் / ஆணையர், வணிகவரித்துறை முனைவர் ச. சந்திரமௌலி, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார். விழாவின் முடிவில் வணிகவரியின் கூடுதல்ஆணையர் (வணிகவரி) திரு.க. ஞானசேகரன் அவர்கள் நன்றியுரைவழங்கினார்.

இக்கருத்தரங்கத்தில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக் குறித்த சிறப்பம்சங்கள் மற்றும் சுங்க வரிசட்டத்தின் கீழ் உள்ள திருத்தங்கள் ஆகியவை வணிகர்களுக்கு காணொளி விளக்கவுரை மூலம் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், வணிகப் பெருமக்களின் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு வணிகவரித்துறையின் உயர் அலுவலர்கள் பதிலளித்தனர்.

விழாவில் பெருந்திரளான வணிகப் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

**கூடுதல்தலைமைச் செயலாளர் /**
**ஆணையர், வணிகவரித்துறை**

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**